Australian Government

COVID-19 VACCINATION

# உங்களுடைய முதியோர் இல்லப் பராமரிப்பு வசதியில் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து இடப்படும் நாளன்று நீங்கள் எதிர்பார்க்க வேண்டியது

## இல்லத்திலுள்ள தங்குநர்கள், குடும்பங்கள், பராமரிப்பாளர்கள் மற்றும் அவர்களது அன்பிற்குரியவர்களுக்கான தகவல்கள்

ஆஸ்திரேலியாவில் வாழ்ந்துகொண்டிருக்கும் ஒவ்வொருவருக்கும் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்துகளை அளிப்பதற்கான திட்டம் ஒன்றை ஆஸ்திரேலிய அரசாங்கம் கொண்டுள்ளது.

முதியோர் பராமரிப்பு இல்லங்களில் பணியாற்றுபவர்களும், அங்கு தங்கியிருப்பவர்களும் ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்தினைப் பெறுவதற்கான தெரிவினை மேற்கொள்ள இயலுமானவர்களில் முதலாவதாக இருப்பார்கள். ஆஸ்திரேலியாவின் தேசிய ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து விநியோகத் திட்டத்தின் ‘முதலாம் கட்ட’(Phase 1a))த்தினது ஒரு பகுதியாகும் இது (first phase (Phase 1a) of Australia’s COVID-19 vaccine national roll-out strategy).

முதியோர் பராமரிப்பு இல்லங்களில் பணியாற்றுபவர்களுக்கும், அங்கு தங்கியிருப்பவர்களுக்குமான ‘கோவிட்-19’ தடுப்பூசி மருந்து இடல்கள் முதியோர் பராமரிப்பு இல்ல வசதிகளில் இடம்பெறும். உங்களுக்குத் தடுப்பூசி மருந்து இடப்படும் நாள் எது என்பதை உங்களுடைய முதியோர் பராமரிப்பு இல்ல வசதி உங்களுக்குத் தெரிவிக்கும்.

தடுப்பூசி மருந்து இடப்படும் தினத்திற்கு முன் வரும் நாட்களிலும், தடுப்பூசி மருந்து இடப்படும் நாளன்றும் நீங்கள் என்ன எதிர்பார்க்கலாம் என்பதைப் பற்றிய தகவகல்களை உங்களுக்கும், உங்களது குடும்பத்தினர், பராமரிப்பாளர்கள் மற்றும் உங்களுடைய அன்பிற்குரியவர்கள் ஆகியோருக்கும் இந்த ஆவணம் அளிக்கிறது.

## தடுப்பூசி மருந்து இடப்படும் தினத்திற்கு முன்பாக

- உங்களுடைய முதியோர் பராமரிப்பு இல்ல வசதிக்கு தடுப்பூசி மருந்துகள் கொண்டுசேர்க்கப்படுவதற்கான ஏற்பாடுகளை ஆஸ்திரேலிய அரசாங்கம் செய்யும்.

- உங்களுடைய முதியோர் பராமரிப்பு இல்ல வசதிக்கு வருகை தந்து, அங்கு தங்கியிருப்பவர்களுக்கும், பணியாற்றுபவர்களுக்கும் தடுப்பூசி மருந்துகளை இடுவதற்காக 'மருத்துவப் பணியாளர்-படை' (clinical workforce) ஒன்றையும் ஆஸ்திரேலிய அரசாங்கம் ஆளெடுப்பு செய்து உருவாக்கியுள்ளது. தடுப்பூசி இடப்படும் நாளினைத் திட்டமிட்டு, அன்றைய தினம் பணிகள் பாதுகாப்பாகவும், திறமையாகவும் நிறைவேற்றப்படுவதை உறுதிசெய்வதற்காக தடுப்பூசி மருந்து இடப்படும் தினத்திற்கு முன் வரும் நாட்களில் இந்த மருத்துவப் பணியாளர்கள் உங்களுடைய இல்ல வசதியுடன் மிக நெருக்கமாகச் செயல்படுவார்கள்.

- 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினைப் பெறுவதற்கான சம்மதத்தினை அளிக்குமாறு உங்களுடைய முதியோர் இல்லப் பராமரிப்பு வசதி உங்களையும், உங்களுடைய முடிவெடுப்புப் பதிலாள் (substitute decision maker) அவர்களையும் கேட்கும் (உங்களுக்கான பதிலாள் ஒருவர் ஏற்படுத்தப்பட்டிருந்தால்).
    - 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதைப் பற்றி அறிவார்ந்த முடிவு ஒன்றை நீங்கள் மேற்கொள்ள உதவுவதற்கான தகவல்கள் கிடைப்பில் உள்ளன. உங்களுடைய இல்ல வசதியினால் இந்தத் தகவல்கள் ஏற்கனவே உங்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்காவிட்டால், பிரதி ஒன்றை 'சுகாதார திணைக்கள'த்தினது வலைத்தல(Department of Health's website)த்தில் நீங்கள் காணலாம்.

    - சம்மதத்தினை அளிப்பதற்கு முன்பாக, தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதன் பலன்கள் மற்றும், அதிலுள்ள ஆபத்துகள் ஆகியவற்றைப் பற்றியும், 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வது உங்களுக்கு ஏற்றதா என்பதைப் பற்றியும் உங்களுடைய இல்ல வசதியிலுள்ள மருத்துவப் பணியாளர்கள், பொது மருத்துவர் (GP) ஒருவர் அல்லது மற்ற சுகாதாரத் தொழிலர்களுடன் கலந்தாலோசிப்பதற்கான தெரிவையும் நீங்களும், உங்களுடைய குடும்பத்தினரும், பராமரிப்பாளர்களும், முடிவெடுப்பாளர்களும் மேற்கொள்ளலாம்.

- தடுப்பூசி மருந்தினைப் பெற்றுக்கொள்வது உங்களுக்கு ஏற்றதுதானா என்பதை உறுதிப்படுத்த உங்களுடைய இல்ல வசதியிலுள்ள மருத்துவப் பணியாளர்கள் உங்களுடைய உடல்நலத்தை சோதிப்பார்கள். உங்களுடைய உடல்நலத்தைப் பற்றிய கவலைகள் எதுவும் உங்களுடைய இல்ல வசதியினருக்கு இருந்தால், அவர்கள் பொது மருத்துவர் (GP) ஒருவருடன் கலந்தாலோசிப்பார்கள். உங்களுடைய உடல்நலத்தைப் பற்றியும், 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதைப் பற்றியும் உங்களுடைய பொது மருத்துவ(GP)ருடன் பேசும் தெரிவினை நீங்களும் எவ்வொரு சமயத்திலும் மேற்கொள்ளலாம்.

- 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொள்வதற்கு நீங்கள் சம்மதித்தால், உங்களுடைய முதியோர் இல்லப் பராமரிப்பு வசதியானது தடுப்பூசி மருந்தைப் பெறுவதற்காக உங்களைப் பதிவு செய்யும். தடுப்பூசி மருந்து இடப்படும் நாளுக்கான அனைத்து ஏற்பாடுகளையும் உங்களுடைய இல்ல வசதியினர் தடுப்பூசி மருந்தை இடும் பணியாளர் படையுடன் நிர்வகிப்பார்கள்.

- 'கோவிட்-19' தடுப்பூசி மருந்திற்கான பரிந்துரை ஒன்றை உங்களுடைய பொது மருத்துவர் (GP) உங்களுக்காக ஏற்படுத்த வேண்டியதில்லை.

- 'முதியோர் பராமரிப்புப் பரிந்துரையாளர்' (aged care advocate) ஒருவரைப் பெறுவதற்கான உரிமை உங்களுக்குள்ளது. OPAN எனும் அமைப்பின் மூலமாகக் கிடைக்கும் இந்த சேவை இலவசமானது, இரகசியமானது, மற்றும் அரசாங்கத்திடமிருந்தும், முதியோர் பராமரிப்பு சேவை வழங்குநர்களிடமிருந்தும் இது சுயாதீனமானது. உங்களுடைய மாநிலம் அல்லது எல்லைப்பகுதியிலுள்ள 'முதியோர் பராமரிப்புப் பரிந்துரையாளர்க'ளை நீங்கள் 1800 700 600 எனும் இலக்கம் அல்லது opan.com.au எனும் வலைத்தலம் மூலமாகப் பெறலாம்.

## தடுப்பூசி இடப்படும் நாளன்று

- தடுப்பூசி மருந்தைப் பெற்றுக்கொள்ளும் உத்தேசத்தில் நீங்கள் இருந்தால், தடுப்பூசி மருந்து இடப்படும் நாளன்று நீங்கள் நலமாக இருக்கிறீர்கள் என்பதை உறுதிப்படுத்துவதற்காக உங்களுடைய இல்ல வசதியிலுள்ள மருத்துவப் பணியாளர்கள் உங்களை சோதிப்பார்கள். தடுப்பூசி மருந்து இடப்படும் நாளன்று உங்களுக்கு மருத்துவப் பிரச்சினை ஒன்று ஏற்பட்டால், உங்களுக்குத் தடுப்பூசி மருந்து இடப்படலாமா, அல்லது பின்னொரு திகதி வரைக்கும் அதைத் தாமதப்படுத்த வேண்டியிருக்குமா என்பதைத் தீர்மானிக்க உங்களுடைய முதியோர் இல்லப் பராமரிப்பு வசதியினர் பொது மருத்துவர் (GP) ஒருவருடன் கலந்தாலோசிக்கக் கூடும்.

- தடுப்பூசி மருந்து இடப்படும் நாளன்று உங்களுக்கு ஆதரவுதவியாக இருப்பதற்காக உதவியாளர் ஒருவரை உங்களுடைய முதியோர் இல்லப் பராமரிப்பு வசதிக்கு வரவழைக்கும் தெரிவினை நீங்கள் மேற்கொள்ளலாம். தகவல்களை மொழிபெயர்க்க, அல்லது நீங்கள் கரிசனப்படுக்கொண்டிருந்தால் உங்களுக்கு மீளுறுதியளிப்பதற்கான ஒருவரை இது உள்ளடக்கலாம்.

- எவ்வொரு தடுப்பூசி மருந்திற்கும் இருப்பதைப் போல, உங்களுடைய 'கோவிட்-19' தடுப்பூசி மருந்தினை நீங்கள் இட்டுக்கொண்ட பிறகு உங்களுக்கு சில பின் விளைவுகள் ஏற்படக்கூடும். தடுப்பூசி மருந்தினை இட்டுக்கொண்ட பிறகு நீங்கள் எதிர்பார்க்க வேண்டியது என்ன என்பதைப் பற்றிய தகவல்களை தடுப்பூசி மருந்தினை இடும் மருத்துவப் பணியாளர் உங்களுக்குக் கொடுப்பார். 'சுகாதாரத் திணைக்கள'த்தின் வலைத்தல(Department of Health's website)த்திலும் இந்தத் தகவல்கள் கிடைக்கும்.

- உங்களுக்குத் தடுப்பூசி மருந்து இடப்பட்ட பிறகு, உங்களுடைய முதியோர் இல்லப் பராமரிப்பு வசதியிலுள்ள பணியாளர்கள் உங்களை அவதானமாய்க் கண்காணிப்பர். உங்களுடைய தடுப்பூசி மருந்தினை நீங்கள் பெற்றுக்கொண்ட பிறகு உங்களுக்கு உடல்நிலை சரியில்லாமல் இருப்பதைப் போல் நீங்கள் உணர்ந்தால், அதை நீங்கள் அவர்களுக்குத் தெரிவிப்பதை உறுதிப்படுத்துங்கள்.

## நடப்பு-நாள் வரைக்குமான நம்பத்தக்கத் தகவல்களைத் தெரிந்துவைத்திருங்கள்

மொழிபெயர்க்கப்பட்ட தகவல்கள் உள்ளடங்கிய தகவல்களை COVID-19 vaccines website எனும் 'சுகாதாரத் திணைக்கள'த்தினது 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகளுக்கான வலைத்தலப் பக்கத்தில் நீங்கள் காணலாம். 'கோவிட்-19' தடுப்பூசி மருந்துகளைப் பற்றிய புதிய தகவல்கள்' (COVID-19 vaccines updates)-ஐப் பெறுவதற்கான அடியொப்ப(subscribe)த்தினையும் நீங்கள் இடலாம்.

1800 020 080 எனும் இலக்கத்தில் 'தேசிய கொரோனா-வைரஸ் உதவி இணைப்'(National Coronavirus Helpline)பினையும் நீங்கள் அழைக்கலாம், மற்றும் தேவைப்பட்டால் மொழிபெயர்த்துரைப்பாளர் ஒருவர் வேண்டுமெனக் கேட்கலாம்.

உங்களுக்கு இருக்கும் 'கோவிட்-19' சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் அல்லது கரிசனங்கள் எதைப் பற்றியும் நீங்கள் பேச விரும்பினாலோ, உங்களுடைய முதியோர் பராமரிப்பு சேவை வழங்குநரோடு ஈடுபாடு கொள்வதில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டாலோ, 'வயதானோர் பரிந்துரை உதவித் தொடர்புவலை' (Older Persons Advocacy Network (OPAN)) எனும் அமைப்பின் உதவி உங்களுக்குக் கிடைக்கும். 1800 237 981 எனும் இலக்கத்தினை காலை 6 மணி முதல் இரவு 10 மணி வரை (AEDT (ஆஸ்திரேலிய கிழக்குப் பகல்-ஒளி நேரம்)), வாரத்திற்கு 7 நாட்கள் நீங்கள் அழைக்கலாம், அல்லது covid@opan.com.au-இற்கு மின்னஞ்சல் அனுப்பலாம்.